# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கனடாவிலுள்ள பள்ளிவாயிலில் 27.06.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

இன்று எனது இந்த குத்பாவுடன் கனடாவிலுள்ள அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்டு மாநாடு ஆரம்பமாகிறது. ஒரு நீண்ட காலமாக உலகின் எல்லா நாடுகளிலும் மாநாடுகள் நடத்தியதன் காரணாக அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த மாநாடுகளின் நோக்கங்கள் தொடர்பாகவும் அதன் மரபுகள் பற்றியும் நன்றாக தெரிந்திருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால், முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா (MTA)வை பார்க்கின்ற ஒவ்வொரு அஹ்மதிக்கும் உலகில் நடைபெறுகின்ற மாநாடுகளின் காட்சிகளைக் காட்டுவதன் மூலம் எப்படிப்பட்ட ஒரு ஒற்றுமையின் கயிற்றில் அவர்களை சேர்த்துள்ளது என்றால் அது பல்வேறு சமுதாயங்களைச் சார்ந்துள்ள அஹ்மதிகளின் இயல்பையும் மரபுகளையும் ஒன்றாக இணைத்து விட்டது. நன்மை மற்றும் தூய்மையின் தாக்கம் அவர்களது முகங்களில் வெளிப்படுகின்றது. நாம் இந்த விஷயத்தை உலகத்தின் முன்பு சவாலாக வைக்கின்றோம். இதுதான் ஜமாஅத்தின் இயல்பாகும். இங்கு கிலாஃபத் ஜுப்ளி தொடர்பாக நடந்த வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முக்கிய பிரமுகர்களிடம் நான் பேசிய போது, உலகிலுள்ள ஒவ்வொரு பகுதியிலும் உள்ள சமுதாயங்களில் உள்ள அஹ்மதிகள் உங்களுக்கு ஒரு விஷயத்தில் ஒன்றுபோல் காட்சியளிப்பார்கள். அது நன்மையில் ஒருவர் மற்றவரை முந்துவதும் தங்களிடம் தூய்மையான மாற்றத்தை ஏற்படுத்த அவர்கள் செய்யும் முயற்சியுமாகும். எதுவரை எந்தவோர் அஹ்மதியிடம் இந்த நோக்கத்தை நிறைவடையச் செய்யும் முயற்சிகள் தொடர்ந்து செய்யப்படுமோ அதுவரையில் அவர் ஜமாஅத்தின் சிறப்பாக செயல்படும் ஒரு நபராகத் திகழ்வார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக அல்லாஹ் அவருக்கு வழங்கியுள்ள அத்ந அருட்கொடையிலிருந்தும் அவர் பலனடைவார். அல்லாஹ்வின் பக்கம் முன்னேறிச் செல்பவர்களிடம் தென்படும் அந்த அடையாளங்கள் அவர்கள் முகத்தில் இருக்கும். அவ்வாறு தென்பட வேண்டும். இவர்கள் இறைவனை வணங்கக் கூடியவர்களாக இருப்பார்கள். உலகின் எந்த பகுதியில் இவர்கள் சென்றாலும் அஹ்மதிய்யத்திற்காக தியாகங்கள் செய்வதில் இவர்கள் முன்னணியில் இருப்பார்கள். இவர்கள் தங்கள் இறைவணக்கத்தின் தரத்தை உயர்த்த முயற்சிகளை செய்பவர்களாக இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட மக்கள் தொடர்பாக இறைவன் இவ்வாறு கூறுகின்றான்:

அவர்கள் அல்லாஹ்வின் அருளையும் விருப்பத்தையும் தேடியவாறு குனிந்தும் சிரம் பணிந்தும் வணங்குபவர்களாக நீர் அவர்களை காண்கின்றீர். அவர்களின் (சிறப்புத் தன்மைக்குரிய) அறிகுறி அவர்களின் நெற்றியிலுள்ள சிரம்பணிதலின் அடையாளமாகும். (48:30)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டவர்களுக்குரிய இந்த அடையாளத்தை அல்லாஹ் திருக்குர்ஆனில் அறிவித்துள்ளான். இந்த காலத்தில் இப்படிப்பட்ட ரஹ்மானை வணங்கும் அடியார்களை உருவாக்குவதற்காகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரான வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அல்லாஹ் அனுப்பியுள்ளான். அவர்கள் ஒரு தூய ஜமாஅத்தை நிறுவினார்கள். அவர்கள் ரஹ்மானை வணங்குகின்ற அடியார்களை உருவாக்கினார்கள். அவர்கள் மீண்டும் முன்னவர்களின் தூய முன்மாதிரியை உலகில் நிலைநாட்டியுள்ளார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொடர்ந்து தனது அறிவுரைகளாலும் போதனைகளாலும் ஜமாஅத்தில் தூய இறையடியார்களை உருவாக்குவதன் பக்கம் நமக்கு கவனமூட்டியுள்ளார்கள். அந்த நல்லடியார்களின் வாழ்வின் நோக்கம் தன்னைப் படைத்தவனை அறிந்து அவன் முன்னால் குனிவதேயாகும். அவ்வாறு குனிய வேண்டும். ஜமாஅத்தில் உள்ளவர்கள் இறைவழியில் உண்மையான நம்பிக்கையாளர்களாக இருக்க வேண்டும் என்று நமக்கு கவனமூட்டியுள்ளார்கள். இறைவனது

பார்வையிலும் அவர்கள் உண்மையான மூஃமின்களாக இருக்க வேண்டும் என்றும் அவர்களது வாழ்க்கையின் நோக்கம் இறைவணக்கத்தின் உயர்வான தரத்தை நிலைநாட்டுவதேயாகும் என்று அவர்கள் கூறியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

எவர்கள் இறைவனது பார்வையில் உண்மையில் மூஃமின்களாக இருக்கின்றார்களோ, மேலும் எவர்களை அல்லாஹ் குறிப்பாக தனது அடியாராக தேர்ந்தெடுத்துள்ளானோ, எவர்களை அல்லாஹ் தனது கைகளால் தூய்மைப்படுத்தி யுள்ளானோ, எவர்களுக்கு அல்லாஹ் தனது சிறப்பான, தன்னால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களின் கூட்டத்தில் இடமளித்துள்ளானோ எவர்களைப் பற்றி அல்லாஹ் அவர்களின் (சிறப்புத் தன்மைக்குரிய) அறிகுறி அவர்களின் நெற்றியிலுள்ள சிரம் பணிதலின் அடையாளமாகும் (48:30) என்று கூறியுள்ளானோ அந்த நன்மக்கள் மத்தியில்தான் சிரம்பணிதலின் அடையாளங்களும் இறைவனை வணங்கக்கூடிய அடியார்களின் கூட்டமும் கண்டிப்பாக இருக்க வேண்டும். ஏனென்றால், இறைவனது வாக்குறுதியில் ஒருபோதும் தவறும், செயற்கைத் தன்மையும் இருக்காது.

எனவே, நாம் காலத்தின் இமாம் மீது ஈமான் கொண்டுள்ளோம் என்பது நமது வாதமாக இருந்தால் நமது சஜ்தாக்களும், நமது இறைவணக்கங்களும் அல்லாஹ்வின் நெருக்கத்தை நமக்கு பெற்றுத் தருகின்ற அந்த ஈமானின் அடையாளம் நம்மிடம் இருக்க வேண்டும். அந்த உயர்வான தரத்தைப் பெற நாம் முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீண்டும் மீண்டும் பல்வேறு வழிமுறைகள் மூலம் நாம் நமது இறைவணக்கத்தில் உயர்வான தரத்தைப் பெறுவதன் பக்கம் நமக்கு கவனமூட்டியுள்ளார்கள். அது இறைவனை உண்மையில் வணங்கக் கூடியவர்களில் நம்மை சேர்த்து விடும்.

நமது இறைவணக்கங்கள் பொருளற்ற இறைவணக்கங்களாக இருக்கக் கூடாது. நமது ஈமானும் வெளிப்படையான ஈமானாக மட்டும் இருக்கக் கூடாது. மாறாக, அந்த இறைவணக்கங்கள் எப்படிப்பட்ட உயர்வான எல்லையை தொடக்கூடியவையாக இருக்க வேண்டுமென்றால், அப்போது இறைவன் தனது அடியார் பேசுகின்ற அந்த நாவாக ஆகி விடுகின்றான் . தனது அடியார் பலவேறு காரியங்களை நிறைவேற்றுகின்ற அந்த கையாக இறைவன் ஆகி விடுகின்றான். தனது அடியார் நடந்து செல்கின்ற அந்த கால்களாக இறைவன் ஆகி விடுகின்றான். நன்மைகளின் பக்கம் அவர் முன்னேறிச் செல்கின்றார். ஒவ்வொரு துன்ப வேளையிலும் இறைவன் தனது அடியாருக்கு உதவி செய்கின்றான். இந்த நோக்கங்களை நாம் பெற்றுக் கொள்வதற்காகத்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆண்டு மாநாடுகளுக்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பைஅத்தில் நுழைந்துள்ள எல்லா தூயவர்களுக்கும் இந்த எளியவன் மூலமாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்னவென்றால், பைஅத் செய்வதன் நோக்கம் அந்த பைஅத் மூலமாக உலகத்தின் மீதுள்ள நேசம் குளிர்ந்து விட வேண்டும். தனது கருணைமிக்க எஜமானனான இறைவன் மீதும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதுள்ள அன்பும் உள்ளத்தில் மிகைத்து நிற்க வேண்டும். அதன் மூலமாக எப்படிப்பட்ட (உலக நேசத்திலிருந்தும்) துண்டிக்கப்பட்ட ஒரு நிலைமை உருவாக வேண்டுமென்றால் மறுமை பயணம் அவருக்கு வெறுக்கத்தக்கதாக இருக்கக் கூடாது.

அல்லாஹ்வின் மீதுள்ள நேசம் உள்ளத்தில் எப்படி மிகைத்து நிற்க வேண்டும்? அதற்காக எவ்வகையிலுள்ள இறைவணக்கத்தை நாம் மேற்கொள்ள வேண்டும்?

**இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

எதுவரை உள்ளம் தாழ்மையின் சிரம் பணிதலை செய்யவில்லையோ அதுவரை வெளிப்படையான சஜ்தாக்கள் மீது மட்டும் நம்பிக்கை வைப்பது ஒரு வெற்று ஆசையாகும். எவ்வாறு குர்பானியின் மாமிசமும் இரத்தமும் இறைவன் வரை சென்றடைவதில்லையோ தக்வா மட்டுமே அவனைச் சென்றடைகின்றதோ அவ்வாறே ருகூஉ எதுவரையில் உள்ளத்தின் ருகூஉவாகவும், ஸுஜூதும், நிற்றலும் உள்ளத்தின் ஸுஜூதும் நிற்றலுமாக இல்லையோ அதுவரை வெளிப்படையான உடலளவிலான ருகூஉக்களும் சஜ்தாக்களும் ஒன்றுமற்றவையாகும். இறைவனின் கட்டளைகளை செயல்படுத்துவதுதான் உள்ளத்தின் நிற்றலாகும். அவன் பக்கம் குனிவதே உள்ளத்தின் ருகூஉ ஆகும். தன்னை இறைவனுக்காக முழுமையாக அர்ப்பணித்து தன்னை ஒன்றுமற்றப் பொருளாக கருதுவதுதான் உள்ளத்தின் ஸுஜூது ஆகும்.

**தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

நமது ஜமாஅத்தில் உள்ளவர்களின் உள்ளங்களை இறைவன் தூய்மைப்படுத்த வேண்டும் என்பதே எனது துஆவாகும். தனது கருணையின் கைகளை நீளமாக வைத்து அவர்களின் உள்ளங்களை இறைவன் தன் பக்கம் திருப்ப வேண்டும். மேலும் எல்லா விதமான தீங்குகளையும் வெறுப்பையும் அவர்களது உள்ளத்திலிருந்து அகற்ற வேண்டும். ஒருவர் மற்றவரிடம் உண்மையான நேசம் வைக்கும் தன்மையை அவர்களுக்கு இறைவன் வழங்க வேண்டும் என்று நான் துஆ செய்கின்றேன். எனது இந்த துஆ நிச்சயமாக ஏற்றுக் கொள்ளப்படும் என்று நான் நம்புகின்றேன். இறைவன் எனது துஆக்களை வீணாக்க மாட்டான்.

எனவே, இன்றைய நாட்களில் நாம் அந்த பணிவான சஜ்தாக்களைத் தேட வேண்டும். இந்த மாநாட்டு சூழ்நிலையின் அருளால் அல்லாஹ்வின் அருள்களின் மழையிலிருந்து பலன் பெற்றவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த மாநாட்டில் பங்கு பெறுபவர்களுக்காக செய்த துஆக்களிலிருந்து பலன் பெற்றவாறு அல்லாஹ்வின் நெருக்கத்தை நமக்குப் பெற்றுத் தருகின்ற அந்த சஜ்தாக்களையும் இறைவணக்கங்களையும் நாம் தேட வேண்டும். மேலும் அதில் தொடர்ந்து நிலைநிற்பதற்காக மேலும் துஆக்கள் செய்ய வேண்டியது அவசியமானதாகும். அதன் மூலமாக அல்லாஹ்வின் முடிவு பெறாத அருள்களின் ஒரு தொடர் எப்போதும் இருந்து வர வேண்டும். நமது இறைவணக்கத்தின் தரம் எப்போதும் உயர்ந்து கொண்டே செல்ல வேண்டும். அல்லாஹ்வின் எல்லா கட்டளைகளின்படியும் நாம் செயலாற்றுபவர்களாக இருக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் துஆக்களை அல்லாஹ் நம்மில் ஒவ்வொருவரது ஹக்கிலும் ஏற்றுக் கொள்வானாக. நமது உள்ளங்களை அவன் தூய்மைப்படுத்துவானாக. நமது உள்ளங்களில் இறைவன் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஆட்சி நிலவட்டும். இந்த இறை வணக்கங்களின் சுவையான கனிகளை நாமும் சாப்பிட்டு நமது சுற்றுச் சூழலில் உள்ளவர்களுக்கும் அந்த கனிகளை சுவைக்க வைப்பவர்களாக நாம் இருப்போமாக. நமது சந்ததிகளுக்கும் அதை வழங்குபவர்களாக நாம் இருப்போமாக. நமது உள்ளங்கள் எப்போதும் அல்லாஹ்வின் கருணையிலிருந்து தனது பங்கைப் பெற்று அல்லாஹ்வுக்குரிய உரிமைகளையும் படைப்பினங்களுக்குரிய உரிமைகளையும் நிறைவேற்றுவதற்கு முயற்சிகளை செய்த வண்ணம் இருக்கட்டும். தன்னுடைய ஜமாஅத் தொடர்பாக எத்தகு வேதனையை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்களோ அதை புரிந்தவாறு நாம் இறைவனை வணங்கும் அடியார்களாக ஆகுவோமாக. அவர்கள் செய்த துஆக்களிலிருந்து நாமும் நமது சந்ததிகளும் பலனைப் பெறுவோமாக. அல்லாஹ் திருக்குர்ஆனில் துஆக்கள் செய்வதன் பக்கம் கவனமூட்டியவாறு பல்வேறு இடங்களில் இதைப் பற்றி கூறியுள்ளான். குறிப்பாக அல்லாஹ் மனிதனை சிறந்த படைப்பினமாக உருவாக்கியுள்ளான் என்பதையும் அவனுக்கு வழங்கியுள்ள மூளையைப் போன்று வேறு எந்த படைப்பினத்திற்கும் அவன் வழங்கவில்லை என்பதையும் அந்த மனிதனுக்கு ஆற்றலை பயன்படுத்தக்கூடிய உயர் தகுதிகளையும் வழங்கியுள்ளான் என்பதையும் அது அவனைத் தவிர மற்ற படைப்பினங்களுக்கு வழங்கப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டி மனிதனுக்கு அவனது மரணத்திற்குப் பிறகு என்றும் முடிவுறாத ஒரு புது வாழ்க்கையைப் பற்றிய

நற்செய்தியையும் அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியுள்ளான். அந்த மறுமை வாழ்க்கையில் மனிதனின் செயல்களுக்கு ஏற்ப நற்கூலி அல்லது தண்டனை அவனுக்கு வழங்கப்படும். இவை வேறு எந்த படைப்பினத்திற்கும் வழங்கப்படமாட்டாது. எனவே, எவர்கள் இந்த முக்கியமான கருத்தைப் புரிந்துள்ளார்களோ அவர்கள் வெற்றி பெறுவார்கள். அல்லாஹ் மனிதனுக்கென்று சில வழிகளை நிர்ணயித்துள்ளான். அந்த வழிகளில் சென்றால் இவ்வுலகிலும் நீங்கள் இறைவனின் திருப்தியைப் பெற்றவர்களாக இருப்பீர்கள். மறுமையிலும் இறைவனின் திருப்தியைப் பெற்றுக் கொள்வீர்கள். இறைவனின் திருப்தியைப் பெறுவதற்கான அந்த வழிகள் என்ன? அது இறைவனை வணங்கக்கூடிய அடியாராக ஆகுவதேயாகும். மேலும் நற்செயல்களையும் செய்து வர வேண்டும். எல்லாவற்றையும் விட மிக மிக முக்கியமான அடிப்படையான விஷயம் அல்லாஹ்வை வணங்குவதேயாகும். அந்த நோக்கத்திற்காகவே மனிதன் படைக்கப்பட்டுள்ளான். அல்லாஹ் திருக்குர்ஆனில் நாம் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன் என்று கூறியுள்ளான். இந்த வசனத்தை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

மனிதன் தன் இயல்பின் இறைவனுக்காகவே படைக்கப்பட்டிருப்பதால் அல்லாஹ் அவனது இயல்பிலேயே தனக்கென்று எதையாவது ஒன்றை வைத்துள்ளான். நாம் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன் என்று இறைவன் இதைப் பற்றி கூறியுள்ளான். மறைவிலும் மிக மறைவாக இருக்கக் கூடிய காரணிகளால் மனிதனை தனக்காக அவன் உருவாக்கியுள்ளான். இதன் மூலமாக உங்களது படைப்பின் நோக்கமாக அல்லாஹ்வை வணங்குவதுதான் என்று அவன் உங்களுக்கு கட்டளையிட்டுள்ளான் என்பது தெரிகிறது. ஆனால், எவர்கள் தங்களது இயல்பான இந்த அசல் நோக்கத்தை விட்டு விட்டு விலங்குகளைப் போல் தங்களது வாழ்வின் நோக்கம் உண்பதும், குடிப்பதும், உறங்குவதும் தான் என கருதுகின்றார்களோ அவர்கள் இறைவனின் கருணையிலிருந்தும் மிக தொலைவில் சென்று விட்டார்கள். இறைவன் அவர்களுக்காக பொறுப்பேற்றுக் கொள்ள மாட்டான். இறைவன் பொறுப்பேற்றுக் கொள்ளும் அந்த வாழ்க்கை நான் ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன் என்ற வசனத்தின் கருத்தின் மீது நம்பிக்கை வைத்து தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்வதன் மூலமே கிடைக்கும். மரணத்தைப் பற்றி அது எப்போது வரும் என்ற எந்த உத்திரவாதமும் தரப்படவில்லை. உங்களை இறைவன் படைத்திருப்பதன் நோக்கம் நீங்கள் அவனை வணங்குவதுதான் என்ற விஷயத்தை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். மேலும் அவனுக்காகவே ஆகி விடுங்கள். உலகம் உங்களது நோக்கமாக இருக்கக் கூடாது. எனது கருத்துப்படி இதுவே முக்கியமான விஷயமாக இருப்பதால்தான் இதனை மீண்டும் மீண்டும் விளக்கிக் கூறுகின்றேன். இதற்காகவே மனிதன் பிறந்துள்ளான். மேலும் இந்த விஷயத்திலிருந்து தான் அவன் விலகி வெகு தொலைவில் சென்று கொண்டிருக்கின்றான். நீங்கள் இவ்வுலகில் செய்து வரும் வியாபாரங்களை விட்டு விடுங்கள் என்று நான் கூறவில்லை. மனைவி மக்களை விட்டு விட்டு ஏதாவது ஒரு காட்டில் அல்லது ஒரு மலைக்கு மேல் சென்று அமரும்படி நான் உங்களிடம் கூறவில்லை. இஸ்லாம் இதற்கு அனுமதி வழங்கவில்லை. துறவறத்தை மேற்கொள்வது இஸ்லாத்தில் இல்லை. இஸ்லாம் மனிதனை சுறுசுறுப்புள்ளவனாகவும், புத்திசாலியாகவும், உழைக்கக் கூடியவனாகவும் ஆக்க விரும்புகிறது. எனவே, உங்களது வியாபாரத்தை சிறந்த முயற்சியுடன் நீங்கள் செய்து வர வேண்டும் என்றே நான் கூறுகின்றேன். எவரிடம் நிலம் உள்ளதோ அதை பிறருக்கு வழங்குவதில் அவர் தயக்கம் காட்ட வேண்டும். அதற்கு ஈடான கூலி வழங்கப்படும் என நபிமொழியில் கூறப்பட்டுள்ளது. எனவே, உலக வியாபாரங்களிலிருந்து விடுபட்டு தனித்து இருப்பதுதான் நான் கூறுகின்ற கருத்து என்று எவராவது கருதுவதாயிருந்தால் அவர் தவறிழைத்துள்ளார். அவ்வாறு அல்ல. உண்மையான விஷயம் என்னவென்றால் நீங்கள் செய்கின்ற எல்லா வியாபாரம் மூலமாகவும் இறைவனது திருப்தி கிடைக்கின்றதா என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். அதுவே உங்கள் நோக்கமாக இருக்க வேண்டும். இறைவனின் எண்ணங்களுக்கும் நாட்டத்திற்கும் எதிராக உங்களது நோக்கங்களுக்கும் உணர்வுகளுக்கும் நீங்கள் முன்னுரிமை வழங்கக் கூடாது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைஞானத்தையும் இறைநெருக்கத்தையும் பெற்றுக் கொள்வதற்காகத்தான் இறைவன் மனிதனைப் படைத்துள்ளான். எவர் இந்த அசல் நோக்கத்தை கண்முன் நிறுத்தி செயல்படுவதில்லையோ, இரவு பகலாக உலகைப் பெற்றுக் கொள்ளும் கவலையிலேயே மூழ்கியிருக்கின்றாரோ, இந்த நிலத்தை வாங்க வேண்டும். இந்த வீட்டைக் கட்ட வேண்டும். இந்த சொத்தை எனது ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவர வேண்டும் என்ற சிந்தனையிலேயே இருக்கின்றாரோ அப்படிப்பட்டவருக்கு சிறிது காலம் அவகாசம் வழங்கிய பிறகு இறைவன் அவரை தன் பக்கம் அழைத்துக் கொள்வதை தவிர வேறு எவ்வகையில் அவருடன் பரிமாற முடியும்? இறைநெருக்கத்தைப் பெறுவதற்காக மனிதனின் உள்ளத்தில் ஒரு வேதனை இருக்க வேண்டும். இதன் காரணாக அந்த மனிதன் இறைவனின் பார்வையில் கண்ணியத்திற்குரிய ஒருவனாக ஆகி விடுகின்றான். இந்த வேதனை அவனது உள்ளத்தில் இல்லாமல் இந்த உலகமும் அதில் இருப்பவை பற்றிய வேதனை மட்டும்தான் அவனிடம் இருக்கின்றதென்றால் இறுதியில் சிறிய கால அவகாசத்தைப் பெற்ற பிறகு அவன் அழிந்து விடுவான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் விளக்கிக் கூறியுள்ள நமது வாழ்வின் நோக்கம் இதுவேயாகும். மனிதனின் இயல்பில் அல்லாஹ் இலாபத்தை (இறைவணக்கத்தை) வைத்துள்ளான். உலக விஷயங்களில் மூழ்கி இறைவனை மறந்து வாழும் மனிதன் ஏதாவது ஒரு துன்பத்தில் சிக்கித் தவிக்கும் போது அவனையும் அறியாமல் இறைவனின் பக்கம் அவனது பார்வை செல்கிறது. ஆனால் உலக வி-யங்கள் அவரிடம் மிகைத்து நிற்பதால் அந்த துன்பத்திலிருந்து விடுபட்டவுடன் மீண்டும் அவர்கள் இறைவனை மறந்து விடுகின்றார்கள். அல்லாஹ் இதைப் பற்றியும் திருக்குர்ஆனில் கூறியுள்ளான். ஆனால், ரஹ்மானின் நல்லடியார்கள் துன்பத்திலிருந்து விடுபட்ட பிறகு முன்பை விட அதிகமாக இறைவன் பக்கம் குனிகின்றார்கள். தங்களது உயர்வான தகுதிகளையும் ஆற்றல்களையும் இறைநெருக்கத்தைப் பெறுவதற்காக அவர்கள் பயன்படுத்துகின்றார்கள். அல்லாஹ் படைத்தவற்றைப் பற்றி அல்லாஹ்வை வணங்குகின்ற ஒரு அடியான் சிந்திக்கும்போது இறைவனை நினைவு கூர்வதில் அவரது நாவு அதிகமாக ஈடுபடும். இது தொடர்பாக அல்லாஹ் கூறுகின்றான்.

வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பிலும் இரவும் பகலும் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்கு நிச்சயமாக பல அடையாளங்கள் உள்ளன. அவர்கள் நின்று கொண்டும் உட்கார்ந்து கொண்டும் ஒருக்கணித்துப் படுத்துக் கொண்டும் அல்லாஹ்வை (எப்போதும்) நினைத்துக் கொண்டிருப்பர். வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பு பற்றி சிந்தித்துக் கொண்டிருப்பர். (3:192)

இறைவன் வழங்கியுள்ள அறிவு இறைவனை வணங்கும் ஓர் அடியாரை மேலும் இறைவனுக்கு அருகில் கொண்டு செல்லும். அந்த அடியான் தான் படைக்கப்பட்டதைப் பற்றி சிந்தித்தாலே அது அவரை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்லும். ஆனால், இன்றைய காலத்தில் படித்தவர்கள் கூட இறைவனது படைப்புகளைப் பார்த்த பிறகும் கூட தங்களது அறிவு மட்டும் எல்லாவற்றையும் புரிந்து கொள்ள போதுமானது என்று கருதுகின்றார்கள். இதனால் அவர்கள் நேர்வழியில் இருந்து விலகி விடுகின்றார்கள். ஆனால் இறைவன் மீது நம்பிக்கையுள்ள அவனை வணங்கும் அடியார் இறைவன் அவரிடம் வைத்துள்ள மறைவான ஆற்றல்களை பயன்படுத்தியவாறு அவற்றை இறைவனையும் அவனது ஏகத்துவத்தையும் மேலும் அதிகமாக புரிந்து கொள்வதற்குரிய வழியாக ஆக்கிக் கொள்வார்கள். கண்ணியத்திற்குரிய டாக்டர் அப்துஸ் ஸலாம் சாஹிப் அவர்களும் அல்லாஹ்விடமிருந்து உதவியைப் பெற்று திருக்குர்ஆனின் ஒரு வசனத்திலிருந்து வழிகாட்டலைப் பெற்று விஞ்ஞானத்தில் ஒரு உண்மையை நிரூபித்துக் காட்டினார்கள். இங்கு வளர்கின்ற இளைஞர்கள் எந்த அளவு இறைவனை வணங்குவதன் பக்கம் கவனம் செலுத்துவார்களோ, எந்த அளவு இறைவனிடம் உதவியைக் கேட்டவாறு தங்களிடம் மறைந்துள்ள ஆற்றல்களை பிரகாசிக்கச் செய்வார்களோ அந்த அளவு மற்றவர்களை விட அதிகமாக இறைவனது படைப்புகள் பற்றியும் உலக அறிவு தொடர்பாகவும் அதிகமான ஞானத்தைப் பெற்றுக் கொள்வீர்கள் என்பதை எப்போதும் நினைவில் வையுங்கள். இறைவனை

அறிந்து கொள்ளாதவர்களை விட உங்களுக்குத்தான் அதிகமான ஞானம் வழங்கப்படும். இறைவன் திருக்குர்ஆனில் பிரபஞ்சத்தைப் பற்றி என்ன குறிப்பிட்டுள்ளானோ அதனை ஒரு தூய உள்ளம் கொண்ட அஹ்மதியைத் தவிர வேறு எவராலும் புரிந்து கொள்ள முடியாது. மனிதனிடம் மறைவிலும் மறைவாக இருக்கும் ஆற்றல்களை அல்லாஹ் தனக்கென்றே உருவாக்கியுள்ளான் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குறிப்பிட்டிருப்பதன் ஒரு பொருள் அல்லாஹ் தன்னை வணங்குகின்ற ஒரு அடியாருக்கு தனது படைப்பினங்களின் படைப்பு தொடர்பாக வழிகாட்டுகின்றான். வானம், பூமி மற்றும் பிரபஞ்சத்தில் எவை எல்லாம் படைக்கப்பட்டுள்ளதோ அது எப்படி படைக்கப்பட்டது? என்பதைப் பற்றி அவர்களுக்கு வழிகாட்டுகின்றான். அதன் ஆழமான ஞானம் வரையில் இறைவனை வணங்காத ஒரு அடியாரால் ஒருபோதும் செல்ல முடியாது. ஒரு முஸ்லிம் அல்லாதவருக்கு இவ்விஷயங்களைப் பற்றிய ஆராய்ச்சி இறைவனைப் பற்றிய அறிவை அவருக்கு வழங்குவதற்குப் பகரமாக அவரை கர்வத்தில் ஆழ்த்தி விடுகின்றது. ஆனால், இறைவனை வணங்கக்கூடிய ஒரு அடியார் அல்லாஹ்வின் படைப்பைப் பார்த்து மேலும் அவன் பக்கம் குனிகின்றார். அல்லாஹ்வால் படைக்கப்பட்ட ஒவ்வொரு பொருளும் ஒரு நம்பிக்கையாளரை அவரது ஈமானில் வளர்ச்சியடையச் செய்வதுடன் அல்லாஹ்வின் பக்கம் குனிபவராகவும் அவனை வணங்குபவராகவும் அவரை மாற்றுகின்றது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.**

நம்பிக்கையாளர்கள் யாரென்றால் அவர்கள் இறைவனை நின்றவாறும், அமர்ந்தவாறும், அவர்களது படுக்கைகளில் படுத்தவாறும் நினைவு கூரக்கூடியவர்களாக இருப்பார்கள். வானத்திலும் பூமியிலும் எத்தகைய வியக்கத்தக்க படைப்புகள் உள்ளனவோ அதைப் பற்றி அவர்கள் சிந்தித்துக் கொண்டே இருப்பார்கள். எப்போது இறைவனது படைப்புகளில் உள்ள நுட்பமான விஷயங்கள் அவர்களுக்கு தெளிவாகத் தெரிகின்றதோ அப்போது அவர்கள் இறைவா! நீ இந்த படைப்புகளை வீணாக படைக்கவில்லை என்று அவர்கள் கூறுவார்கள். நம்பிக்கையாளர்களில் சிறந்து விளங்குபவர்கள் இறைவனை படைப்புகளைப் பற்றி அறிந்த பிறகு உலகத்தை வணங்குகின்ற மக்களைப் போன்று பூமியின் வடிவம் இத்தகையது. அதன் பரப்பளவு இவ்வளவு விரிவானது. அதன் ஈர்ப்பு சக்தியின் நிலைமை இவ்வாறு உள்ளது. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவற்றுடன் அதற்கு இத்தகைய ஒரு தொடர்பு உள்ளது என்பதைக் கூறுவதுடன் மட்டும் நின்று விடாமல் இறைவனது படைப்புகளில் உள்ள சிறப்புகளை அறிந்த பிறகு அதை படைத்தவனின் பக்கம் அவர்கள் திரும்பி விடுவார்கள். அதன் மூலமாக தங்களது ஈமானுக்கு அவர்கள் வலுவூட்டுகின்றார்கள். ஈமானுக்கு வலுவூட்டக்கூடியவர்களின் அடையாளம் என்னவென்றால் அது தொடர்பாக அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்.

**இன்னமா யுஃமினு பி ஆயாத்தினல்லதீன இஸா ஃக்கிரு பிஹா ஹர்ரூ சுஜ்ஜதன் வ ஸப்பஹு பிஹம்தி ரப்பிஹிம் வஹும் லா யஸ்தக்பிரூன்** – நமது அடையாளங்கள் மீது நம்பிக்கைக் கொள்பவர்கள் யாரென்றால் அவர்களுக்கு அந்த அடையாளங்கள் தொடர்பாக நினைவூட்டப்படும் போது அவர்கள் சஜ்தா செய்தவாறு பூமியில் வீழ்ந்து விடுவார்கள். அவர்கள் தங்களது இறைவனைப் புகழ்ந்து அவனது தூய்மையை எடுத்துரைப்பார்கள். மேலும் அவர்கள் கர்வத்துடன் நடந்து கொள்ளமாட்டார்கள். (32:16)

இதுதான் ஒரு மூஃமினின் அடையாளமாகும்.

அல்லாஹ்வின் அடையாளங்களில் திருக்குர்ஆனின் போதனைகளும் அடங்கும். நபிமார்கள் மூலம் வெளிப்பட்ட அடையாளங்களும் அடங்கும்.

எந்த அளவு ஒரு நம்பிக்கையாளர் திருக்குர்ஆனின் போதனைகளை சிந்திப்பாரோ, தனது அருகிலுள்ள மக்களைப் பற்றி சிந்திப்பாரோ, இறைவனது எல்லா வகையான படைப்புகள் பற்றி சிந்திப்பாரோ, பிரபஞ்சத்தைப் பற்றி சிந்திப்பாரோ அவருக்கு தன்னைப் படைத்த இறைவனை முன்பை விட அதிகமாக வணங்குவதை தவிர அவருக்கு வேறு எந்த வழியும் இல்லை.

காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டதால் பல அஹ்மதிகளும் தங்களது நெருங்கிய உறவினர்களிடமிருந்து அவர்கள் இழைக்கும் கொடுமையை சகிக்க வேண்டியது வருகிறது. எதிர்ப்பை சந்தித்த

பிறகும் நாம் இறைவனை வணங்குவதில் முழுமையான கவனம் செலுத்தவில்லையென்றால் அதன் மூலம் உலக உறவுகளின் எதிர்ப்பை மட்டும் நாம் சந்திக்கவில்லை. மாறாக இறைவனது அருள்களிலிருந்தும் விலகி நாம் வெகுதூரம் சென்று விடுகின்றோம். எனவே, நம்மில் எவர் தமது தொழுகைகளில் சோம்பேறித்தனம் காட்டுகின்றாரோ அவர் தனது நிலைமையை தானே ஆய்வு செய்து பார்க்கட்டும்.

மனிதனின் உள்ளத்தில் இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதற்கு ஒரு வேதனை இருக்க வேண்டும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறும் போது அஹ்மதிகளாகிய நாம் தான் அதற்கு முதலில் செவிசாய்க்க வேண்டும். நாம் இறைவனின் நெருக்கத்தைத் தேடுவதற்கு அவன் முன்னால் குனிவது அவசியமாகும். அவனை வணங்க வேண்டியது அவசியமாகும். இறைவணக்கங்களில் மிகச் சிறந்த வழிமுறை தொழுகைகளை நிறைவேற்றுவதாகும். தொழுகைகளை எப்படி நிறைவேற்ற வேண்டும்?

**இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.**

இறை வணக்கத்தைப் பெற்றுக் கொள்வதன் சுருக்கம் உண்மையில் ஒருவர் நான் இறைவனைக் கண்டு கொண்டிருக்கின்றேன் என்ற உணர்வுடன் அவன் முன்னால் நிற்பதேயாகும். அல்லது இறைவன் அவரைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற உணர்வுடன் அவன் முன்னால் அவர் நிற்க வேண்டும். எல்லாவிதமான கலப்படம், இணைவைத்தல் ஆகியவற்றிலிருந்து தூய்மையடைந்தவாறு இறைவனின் மகிமையையும், அவனது காத்தோம்பும் பண்பையும் கருத்தில் கொண்டு திருக்குர்ஆனிலுள்ள துஆக்களையும் ஏனைய துஆக்களையும் இறைவனிடம் அதிகமாக கேட்க வேண்டும். அதிகமாக தவ்பா செய்வதுடன் இஸ்திக்ஃபாரும் செய்ய வேண்டும். மீண்டும் மீண்டும் இறைவனிடம் தனது பலவீனங்களை வெளிப்படுத்திக் கூற வேண்டும். அதன் மூலமாக நஃப்ஸ் தூய்மையடையும். மேலும், இதனால் இறைவனுடன் உண்மையான தொடர்பு ஏற்பட்டு விடும். அவன் மீதுள்ள அன்பில் திளைக்கும் நிலை உருவாகி விடும். இதுவே முழு தொழுகையின் சுருக்கமாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தொழுகை உண்மையில் நமக்கு கற்றுத் தரப்பட்ட வழிமுறைக்கேட்ப கேட்கப்படும். ஒரு துஆவேயாகும். அதாவது சில நேரம் எழுந்து நிற்க வேண்டியது வருகிறது. சில நேரம் குனிய வேண்டியது வருகிறது. சில நேரம் சஜ்தா செய்ய வேண்டியது வருகிறது.

இறைநெருக்கம் பெறுவதும் இறைவனுடன் உண்மையான தொடர்பு வைப்பதும் நம்மில் ஒவ்வொருவரது குறிக்கோளாக இருக்க வேண்டும். இறைவனுடன் ஏற்பட்டு விட்டால் பிறகு இறைவன் தனது அடியாரை உலகின் எல்லா குழப்பங்களிலிருந்தும் விடுவித்து விடுவான். அவர்கள் உலக அருட்கொடைகளிலிருந்து புறக்கணிக்கப் படமாட்டார்கள். ஆனால், உலக அருட்கொடைகள் அவர்கள் நோக்கமாக இருப்பதில்லை. தனிப்பட்ட முறையிலும், ஜமாஅத் அளவிலும் அவர்கள் எவ்வளவு வலிமைமிக்கவர்களாக தென்படுவார்கள் என்றால் அவ ர்களைக் காணும் எதிரிகள் எப்போதும் அவர்களுக்கு அஞ்சுவார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எந்த நபர் உண்மையான உணர்வுடனும், முழுமையான உண்மையுடனும், கலப்பற்ற மனத்தூய்மையுடனும் அல்லாஹ்வின் பக்கம் வருவாரோ அவர் ஒருபோதும் வீணாக மாட்டார். இது உறுதியான உண்மையான வி-யமாகும். எவர்கள் இறைவனுக்காக ஆகிவிடுகின்றார்களோ இறைவனும் அவர்களுக்காக ஆகிவிடுவான். ஒவ்வொரு களத்திலும் இறைவன் அவர்களுக்கு உதவுகின்றான். மாறாக அவர் மீது எந்த அளவு கண்ணியத்தையும், அருட்கொடைகளையும் அவன் இறக்குகின்றான் என்றால் மக்கள் அவர்களது ஆடைகளிலிருந்தும் கூட அருள்களைப் பெறுகின்றார்கள்.

இந்த காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு பிறகு அல்லாஹ் இறைவனை வணங்கக்கூடிய மக்களிடம் ஒரு மிகப்பெரும் அருட்கொடையைப் பற்றி வாக்குறுதியளித்துள்ளான். அது

கிலாஃபத்தின் அருட்கொடையாகும். மாறாக, இறைவனை வணங்குபவர்களுக்குத்தான் கிலாஃபத்தின் அருட்கொடை வழங்கப்படும் என்ற வாக்குறுதியை இறைவன் வழங்கியுள்ளான். கிலாஃபத்தின் அருள்களும் இவர்களுக்குத்தான் கிடைக்கும்.

மே 27ந் தேதி கிலாஃபத் ஜுப்ளியைக் கொண்டாடிய சமயத்தில் உலகின் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தின. அதில் கூட்டு துஆ மற்றும் நஃபிலான தொழுகைகள் தொடர்பான நிகழ்ச்சிகைளயும் அவர்கள் வைத்திருந்தார்கள். உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டிலுள்ள ஜமாஅத்துகளும் இதற்கான ஏற்பாட்டை செய்திருந்தார்கள். கனடாவிலிருந்தும் எனக்கு ஒருவர் எழுதிய கடிதத்தில் நாங்கள் வீட்டிலிருந்து பள்ளிவாசலுக்கு இரவு 2.30 மணிக்கு புறப்பட்டோம். பொதுவாக பள்ளிவாசலை சென்றடைய 45 நிமிடங்கள் ஆகும். போக்குவரத்து நெரிசல் இல்லாத காரணத்தால் 20 நிமிடங்களில் நாங்கள் பள்ளிவாசலுக்கு அருகில் வந்து சேர்ந்தோம். அங்கு வந்து பார்த்தபோது தான் எந்த அளவு நீளமான கார்களின் வரிசைகள் இருந்தன என்றால் அந்த சிறிய இடைவெளியை கடந்து செல்வதற்கு எங்களுக்கு அரை மணி நேரம் தேவைப்பட்டது. அதனால் நஃபில் தொழுகையின் இறுதி நேரத்தில் நாங்கள் பள்ளிவாசலுக்குள் சென்றோம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். நீங்கள் நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்துள்ள இந்த உயர்வான தரமானது அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் உங்களுக்கு அன்பு இருக்கின்றது என்பதை வெளிப்படுத்திக் காட்டி விட்டது. மிகவும் இறுக்கமுள்ள ஒரு அஹ்மதியின் உள்ளத்திலும் கூட இந்த அன்பின் நெருப்புப் பொறிகள் உள்ளன. இதன் தாக்கமே இறைவனை வணங்குவதன் பக்கம் அவர்களுக்கு கவனமூட்டியுள்ளது. அதன் மூலமாக அஹ்மதிய்யா கிலாஃபத் நிலைபெறவும் அதன் உறுதிக்காகவும் அவர்களால் துஆக்கள் செய்ய முடிந்தது. இந்த நெருப்புப் பொறிகளைக் கொழுந்து விட்டு எரியும் நெருப்பாக நிரந்தரமாக மாற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள். இதை ஒருபோதும் அழிய விட்டுவிடாதீர்கள். இதுவே இறைநெருக்கத்தைப் பெற்று இறையருள்களைப் பெறுவதற்குரிய வழியாகும்.

இன்று இந்த மாநாடு மூலமாக அல்லாஹ் உங்களுக்கு உங்களது ஆன்மீக முன்னேற்றத்திற்கான சூழ்நிலையைத் தந்துள்ளான். இது கிலாஃபத் ஜுப்ளியின் மாநாடாக இருப்பதால் பொதுவான மாநாடுகளை விட இதற்கு அதிகம் சிறப்பு இருக்கின்றது.

இந்த மாநாடு நடைபெறுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னால் நீங்கள் ஒரு உறுதிமொழியை எடுத்துள்ளீர்கள். அந்த உறுதிமொழியைப் புதுப்பித்துக் கொள்வதற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை அல்லாஹ் உங்களுக்கு வழங்கியுள்ளான். உங்களில் ஒவ்வொருவரும் தனது இறைவனிடம் தமது சஜதாக்களை இந்த உறுதிமொழியை எடுக்க வேண்டும். எந்த உயர்வான நல்லுதாரணத்தை நாங்கள் மே 27ம் தேதி நிலை நாட்டினோமோ இறைவனது அருளால் துஆக்களின் பக்கமும் இறைவணக்கங்களின் பக்கமும் எங்களுக்கு எவ்வாறு கவனம் ஏற்பட்டதோ அதை எங்களது வாழ்கையின் நிரந்தரமான பகுதியாக ஆக்கிக் கொள்ள நாங்கள் முயற்சி செய்வோம். அதன் மூலமாக இறைவனை உண்மையாக வணங்குபவர்களுடன் நாங்கள் இணைந்துவிட வேண்டும் என நீங்கள் இறைவனிடம் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுங்கள். இப்படிப்பட்டவர்களுக்குத்தான் கிலாஃபத் தொடர்பான வாக்குறுதி இருக்கின்றது. அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதிக்கும் இதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. இந்த மாநாடு நம்மில் ஒவ்வொருவருக்கும் இறைவணக்கத்தின் பக்கம் கவனமூட்டக்கூடியதாக அமையட்டும்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT CANADA MOSQUE**
**ON 27.06.2008**

Translated by : **Maulavi M. Rafeeq Ahmad H.A**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**